**21.11.2025**
**MCOP.17/2024**
**<u>ம.சா.1. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து நடந்த தேதி தெரியுமா என்றால் 31.07.2023–ல் நடந்தது. விபத்தானது தண்டலச்சேரி அருகில் உள்ள RTO அலுவலகத்திற்கு அருகில் உள்ள குளத்திற்கு அருகில் தான் நடந்தது என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. கேள்விபட்டேன். விபத்தில் இறந்து போனது எனது மகன் கபிலன். அவருக்கு திருமணம் ஆகவில்லை. எனது மகன் வேலைக்கு ஏதும் செல்லவில்லை என்றும், எனது வருமானத்தில் தான் வாழ்ந்து வந்தார் என்று சொன்னால் எனது மகன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். எனது மகன் கல்லூரியில் படித்து வந்தது குறித்து எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. விபத்து நடைபெற்ற நாளில் இருசக்கர வாகனத்தை யார் ஓட்டியது என்றால் எனது மகன் ஓட்டினார். பின்புறத்தில் விஜய் என்பவர் அமர்ந்து கொண்டு வந்தார். எனது மகன் கபிலன் இருசக்கர வாகனத்தில் சாகசம் செய்து கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்றதால் தனக்குத்தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. யார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் மகன் மீது தான் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது

என்றால் சரிதான். எனது மகன் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் பின்புறத்தில் அமர்ந்து சென்ற விஜய் என்பவர் விபத்தில் இறந்து போய்விட்டார் என்று சொன்னால் இல்லை. அவருக்கு விபத்தில் அடிப்பட்டு தஞ்சாவூரில் உள்ள நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தஞ்சாவூர் நீதிமன்றத்தில் எனது மகன் ஓட்டிச்சென்ற உரிமையாளரையும், காப்பீட்டு நிறுவனத்தையும் சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் தெரியாது. இந்த வழக்கில் எனது மகன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்டு நிறுவனத்தையும் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த விபத்திற்கு முழுக்க முழுக்க எனது மகன் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. எனது மகனின் வயது, வருமானம் குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் ஓட்டிச்சென்ற வாகனத்தின் உரிமையாளரும், அந்த காப்பீட்டு நிறுவனமும் தான் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றும், 1ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.